விலை: சதம் 75 ★★

# ஈழநாடு

THE EELANADU

மலர் 23 ஐப்பசி 14 முஹரம் 1 இதழ் 257
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 30-10-1981

மன்னார் பகுதிகளில்

## பொலிசாரின் ரோந்து நடவடிக்கை தீவிரம்

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தின் பல பகுதிகளிலும் பொதுமக்கள் சிவில் உடையில் வரும் இனம் தெரியாதநபர்களினால் தாக்கப்பட்டும், பயமுறுத்தப்பட்டும் வருகிறார்கள்.

மன்னார் மாவட்டத்திலுள்ள சில கடைச் சொந்தக்காரர்கள் பயமுறுத்தப்பட்டு வருகிறார்கள். இதனால் மன்னார், பேசாலை போன்ற பலபகுதிகளிலுமுள்ள கடைகள் பலவற்றில் இருந்த பொருட்களெல்லாம் வீடுகளுக்கு எடுத்துச்செல்லப்பட்டது. சிறிதளவு பொருட்கள் மட்டுமே கடையில் வைக்கப்பட்டு வியாபாரம் நடைபெற்றுவருகிறது.

மன்னார் மாவட்டத்திலுள்ள மக்கள் மிகவும் பீதியுடன் காணப்படுகிறார்கள். எப்போதும் தாக்குதல் சம்பவம் இடம்பெறலாம் என்று மக்கள் அச்சம் அடைந்துள்ளனர்.

(6-ம் பக்கம் பார்க்க)

## தவறுதலாக துப்பாக்கி வெடித்ததாம்!

### ஒருவர் காயம்

(யாழ்ப்பாணம்)

ஜீப்பில் பிரயாணம் செய்து கொண்டிருந்த இராணுவத்தினரின் துப்பாக்கி தவறுதலாக வெடித்ததால் பொதுமக்களில் ஒருவர் காயமடைந்துள்ளார் என்று சொல்லப்படுகிறது.

தெற்குப் புன்னாலைக்கட்டுவன் சந்தியிலேயே இச் சம்ப

(6ம் பக்கம் பார்க்க)

★ யாழ்ப்பாண மாவட்டத்தில்

# நகை அடகு நிறுத்தப்பட்டது!

## கிளிநொச்சி வங்கிக் கொள்ளையின் எதிரொலி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள மக்கள் வங்கிகளில் நகைகள் அடவு பிடிப்பது மறு அறிவித்தல் வரை நிறுத்தப்பட்டிருக்கிறது. ஏற்கனவே மக்கள் வங்கிகளில் அடகு வைக்கப்பட்டுள்ள நகைகளை மீட்கும் வேலைகள் மட்டும் தொடர்ந்து நடைபெறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மக்கள் வங்கியில் அண்மையில் நடந்த கொள்ளையைத் தொடர்ந்து வங்கித் தலைவர் டாக்டர் எஸ். ரி. ஜி. பெரேணன்டோ மேற்கண்ட நடவடிக்கையை எடுத்துள்ளார்.

சில வருடங்களுக்கு முன்னர் நடந்த வங்கிக் கொள்ளையைத் தொடர்ந்து யாழ். மாவட்டத்திலுள்ள ஒவ்வொரு தொகுதியிலும் உள்ள மக்கள் வங்கிக் கிளைகளில் அடகு பிடிப்பது நிறுத்தப்பட்டு அத்தொகுதிகளிலுள்ள பிரதான கிளையில் மட்டுமே அடகு பிடிக்கப்பட்டு வந்தது. இதனால் கிராமப்புறங்களிலுள்ள மக்கள் பலத்த கஷ்டத்தின் மத்தியில் பிரதான கிளைக்குச் சென்று அடகு வைக்கவேண்டிய நிலை ஏற்பட்டது.

வங்கிகளில் வியாபார மொத்த விற்பனை வரி அறவிடப்படாததனாலும் வட்டி வீதங் குறைவாக இருந்ததனாலும் மக்கள் அடகு வைப்பதற்கு மக்கள் வங்கியையே நாடிச்சென்றனர். இதனால் தனிப்பட்ட அடகு பிடிக்கும் நிலையங்கள் வெறிச்சோடிக்கிடந்தன.

மக்கள் வங்கியில், ஒருதங்கப் பவுணுக்கு முன்னர் 560 ரூபா மட்டுமே வழங்கப்பட்டு வந்தது. சிறிதுகாலத்திற்கு முன்னர் இத்தொகை 1000 ரூபாவாக அதிகரித்ததால் மக்கள்

(6-ம் பக்கம் பார்க்க)

காங்கேசன் சிமெந்து தொழிற்சாலை

## ஊழியர்கள்மீது மீண்டும் தாக்குதல்!

(மாவிட்டபுரம்)

காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலை ஊழியர்கள் நேற்று முன்தினமும் தாக்குதலுக்குள்ளாகினர்.

நேற்றுக்காலை சிமெந்துத் தொழிற்சாலை தொழிலாளர்கள் தொழிற்சாலைக்கு வந்துகொண்டிருந்தபோது கீரிமலை வீதியில் வைத்து தாக்கப்பட்டுள்ளனராம். சிறு சிறு காயங்களுடன் தொழிற்சாலைக்கு வந்து சேர்ந்த அந்த ஊழியர்கள் லீவில் வீடுகளுக்குச் சென்றார்கள்.

தினமும் காலையிலும், மாலையிலும் பெருந் தொகையான தொழிலாளர்கள் பல பகுதிகளிலிருந்தும் இத்தொழிற்சாலைக்கு வருகிறார்கள். இந்த தாக்குதல்கள் காரணமாக அவர்கள் வேலைக்கு வர அஞ்சு

(6ம் பக்கம் பார்க்க)

## துப்பாக்கிச்சூட்டில் ஒரு பொலிஸ் காயம்

(யாழ்ப்பாணம்)

நேற்று அதிகாலை யாழ்ப்பாணம் ஆரியகுளம் சந்திக்கு அருகில் நடைபெற்ற துப்பாக்கிச்சூட்டுச்சம்பவத்தில் பொலிசார் ஒருவர் காயமடைந்துள்ளார்.

எஸ். தர்மசிறி சமசே (வயது 29) என்ற பொலிசார் சிவில் உடையில் நின்றபொழுதே காலில் துப்பாக்கிச்சூடு பட்டதாகக் கூறப்படுகிறது. இவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சூட்டுச் சம்பவத்தைத் தொடர்ந்து நேற்று அதிகாலை சுற்றுவட்டாரத்தில் கைது செய்யப்பட்ட சுமார் 10 பேர், பொலிசாரின் விசாரணையின் பின்னர் விடுதலைசெய்யப்பட்டனர்.

இச்சம்பவம் தற்செயலாக ஏற்பட்டது என்று பொதுவாகக்கருதப்படுகின்றது. (மா)

## இராணுவ தளபதி யாழ். விஜயம்

(யாழ்ப்பாணம்)

இராணுவத் தளபதி திரு. திஸ்ஸ வீரதுங்கா ஹெலிகொப்டர் மூலம் நேற்றுப் பிற்பகல் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்தார்.

யாழ். மாவட்டத்தில் நடைபெற்ற சில நிகழ்வுகள் குறித்து நேரில் ஆராயும் பொருட்டே இராணுவத் தளபதி இங்கு வந்துள்ளதாக அறியப்படுகிறது. (மா)

## காரைநகர் சீ-நோர்: அறிக்கை தயாராகிறது

(யாழ்ப்பாணம்)

காரைநகர் சீ நோர் திட்டத்துக்கு யாழ். மாவட்ட அபிவிருத்தி சபைத்தலைவர் திரு. சு. நடராசா தலைமையில் விஜயம் செய்த உயர்மட்டக்குழு வொன்று நிலைமைகளை நேரில் பரிசீலனை செய்தது.

இக்குழு அறிக்கை ஒன்றை சில தினங்களில் தயாரிக்கும்.

சீ-நோருக்கு நேற்றுக்காலை விஜயம் செய்த இக்குழு கணக்கு முறைகளை அலசி ஆராய்ந்ததாகத் தெரிய வருகிறது.

இக்குழுவில் யாழ். எம். பி. திரு. வெ. யோகேஸ்வரன், பருத்தித்துறை எம்.பி திரு. கே. துரைரத்தினம், கடற்றொழில் இலாகா பிரதிச் செயலாளர் திரு. எஸ்.எம். ஜே சேனரத்ன உட்பட சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் இடம்பெற்றிருந்தனர்.

(6-ம் பக்கம் பார்க்க)

## 3 கார்கள் கடத்தப்பட்டதாம்

(யாழ்ப்பாணம்)

கொடிகாமத்தில் நேற்று அதிகாலை 3 கார்கள், சீருடை அணிந்தவர்களால் கொண்டு செல்லப்பட்டதைத் தொடர்ந்து அப்பகுதியில் பரபரப்பு ஏற்பட்டது.

கொடிகாமம் புகையிரத நிலையத்திற்கு அருகில் இரு கார்கள் நிறுத்தப்பட்டிருந்ததாகவும், நெடுவண்டியில் வந்த பிரயாணிகள், அக்கார்களை வாடகைக்கு அமர்த்திச் செல்ல முற்பட்டபோது சீருடை அணிந்தவர்கள் அக்கார்களில் ஏறிச் சென்றதாகக் கூறப்படுகிற.

வடமராட்சிப் பகுதிக்கு செல்லவேண்டிய இக்கார்கள் பளை நோக்கிச்சென்றதாக கூறப்படுகிறது. (மா)

கல்வி டிப்ளோமா பட்டப்படிப்பு

## தெரிவானோர் தொகையில் 15 பேர் திடீர் குறைப்பு!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்குக் கல்வி டிப்ளோமா பட்டப் படிப்பிற்குத் தெரிவான ஆசிரிய மாணவரின் எண்ணிக்கை குறைக்கப்பட்டதை ஆட்சேபித்து யாழ். பல்கலைக்கழக நிர்வாகம் கல்வி அமைச்சருக்குக் கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளது.

போட்டிப் பரீட்சையின் மூலம் தெரிவான மாணவர்களில் 41 பேர் யாழ். பல்கலைக்கழகத்துக்கு நேர்முகப் பரீட்சையின்போது நேர்முகப்பரீட்சைக் குழுவால் தெரிவுசெய்யப்பட்டனர் என்றும், ஆனால் பல்கலைக்கழகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்த பட்டியலில் 26 பேரின் பெயர் மாத்திரமே இடம்பெற்றிருப்பதாகவும் பல்கலைக்கழக வட்டாரங்கள் தெரிவித்தன.

நேர்முகப் பரீட்சையில் 41 பேரும் நேர்முகப்பரீட்சைக் குழுவினரால் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டிருந்தனராம்.

யாழ். பல்கலைக்கழகத்தில் 60 பேர் இந்நெறியில் கற்பதற்கான வசதி இருப்பதாக யாழ் பல்கலைக்கழகக் கல்விப் பீடத்தலைவர் திரு. பி. சந்திரசேகரம் தெரிவித்தார். (மா)

## திருட்டுப் பொருட்களை பொலிஸார் மீட்டனர்!

(சுண்டிக்குளி)

யாழ். பெருமாள் கோவிலடியில் ஒரு கடையில் திருட்டுப் போன சில பொருட்களை பொலிசார் நீராவியடியில் உள்ள ஒரு வீட்டிலிருந்து மீட்டுள்ளனர்.

சமீபத்தில் யாழ்ப்பாணம் பெருமாள் கோவிலடி மணிக்கூட்டு வீதியைச் சேர்ந்த சிற்றம்பலம் சரவணபவான் தமது கார் உதிரிப்பாக விற்பனைக் கடையில் ஒரு சைக்கிள் உட்பட பல உதிரிப்பாகங்கள், வயர்கள் களவு போய்விட்டதாக யாழ். பொலிஸில் முறைப்பாடு செய்திருந்தார்.

இதுசம்பந்தமாக புலன் விசாரணையில் ஈடுபட்ட இன்ஸ்பெக்டர் எஸ் ஸ்ரீதரன் தலைமையிலான பொலிஸ் கோஷ்டியினர் நீராவியடியில் உள்ள ஒரு வீட்டில் திருட்டுப்போன பொருட்களை கண்டுபிடித்துள்ளனர். விசாரணையைத் தொடர்ந்து மிகுதிப்பொருட்களையும் கண்டுபிடிப்பதில் பொலிசார் ஈடுபட்டுள்ளனர். (க)

## லொறிச் சாரதிக்கு அபராதம்!

(மண்டைதீவு)

ஊர்காவற்றுறை பிரதான வீதியில் ஒழுங்கற்ற முறையில் லொறியை நிறுத்தி வைத்ததாக லொறிச் சாரதி சபாலசுப்பிரமணியம் மீது ஊர்காவற்றுறை பொலிசாரால் வேலணை ஆரம்ப நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நீதவான் திரு. ஜே. விசுவநாதன் முன்னிலையில்

(6-ம் பக்கம் பார்க்க)

**மணிவாக்கு**

பணம் நமக்குப் பெற்றுத் தருவதெல்லாம் சோறும் கறியுமேயாகும். பணத்தையே உன்னுடைய உயிரும் உடலுமெனவோ, உனது ஒரே நோக்கமுமெனவோ கருதாதே!
—ஸ்ரீ ராமகிருஷ்ணர்

# நமது நோக்கு

## பணமும் படையும்

அரசியல் சமுதாய கோட்பாடுகளிலும் பண்பட்ட வாழ்விலும் முற்றாக வேறுபட்ட இருநாடுகள் உலகில் உண்டென்றால், அவை அமெரிக்காவும் சௌதி அரேபியாவும்.

உலகில் மிகப்பெரிய கைத்தொழில் முன்னேற்றமடைந்த ஜனநாயகநாடு அமெரிக்காவே!

பழமை பேணும் இஸ்லாமிய, மன்னன் ஆட்சியில் அமைந்த சௌதி அரேபியா செல்வத்தில் உலகில் முன்னிற்கின்றது! பாலைவனத்தில் உள்ள ஜனத்தொகை குறைந்த கல்வியவற்ற நாடு அது. இவ்விரு நாடுகளுக்குமிடையே தொடரும் நட்புமிக நுணுக்கமானது; விபரீதமானதுங்கூட.

அமெரிக்காவிற்கு சௌதியின் எண்ணெய் அவசியம். சௌதிக்கு அமெரிக்காவின் டொலர் அவசியம்; இருவருக்கும் சோவியத் ரஷ்யாவுக்கெதிரான பாதுகாப்புத் தேவை. அதேசமயம் அமெரிக்காவின் ஆருயிர் நண்பனான இஸ்ரேலைக் கண்ணில் காணக்கூடாதநிலை சௌதிக்குஉண்டு.

இந்தச்சிக்கலான தொடர்பின் காரணமாக, ஜனாதிபதி றீகன் சௌதிக்கு விற்பனை செய்யவிருந்த மிகப்பலம் வாய்ந்த ஆயுதமும் தடைப்பட்டிருந்தன.

இத்தாமதம் இவ்விரு நாடுகளுக்குமிடையே ஒரளவிற்கு பிணக்கையும் ஏற்படுத்தியிருந்தது.

இந்த இராணுவ உதவியில் தீவிரமாகவிருந்த அமெரிக்க ஜனாதிபதி கடைசியில் வெற்றிகண்டிருக்கிறார். அமெரிக்க செனட் சபை அந்தவிற்பனையை இறுதியில் அங்கீகரித்துவிட்டது. பணமும் படையும் ஒருங்கு திரண்டுவிட்டன.

உலக அமைதியின்மையும் நாடுகளுக்கிடையே நிலவும் ஏற்றத்தாழ்வுகளையும், போர்க்கோலங்களையும் படைப்பலத்தால் அகற்றிவிட முடியுமென்ற பூரண நம்பிக்கை கொண்டிருக்கிறார் ஜனாதிபதி றீகன்.

எனவே எங்கு யுத்தகளம் செவ்வனே அமைக்கப்படலாமென்று கருதுகிறாரோ அங்குள்ள நாடுகளின் நட்பை இராணுவ உதவியுடன் பலப்படுத்துவதே அவருடைய திடமான கொள்கை. அமெரிக்க பொதுமக்கள் இதனை விரும்பாதபோதும் காங்கிரஸை வளைக்கும் செல்வாக்கு அமெரிக்க ஜனாதிபதியின் பதவிக்கு இயல்பாக உண்டு.

ஈரானிலே ஷாவுக்கு நேர்ந்த கதி தமக்கொரு எச்சரிக்கையாகக் கருதும் சௌதி மன்னர் அமெரிக்காவின் உதவியை நாடுவது இயல்பு. ஷாவின் பிற்போக்கு ஆட்சியை அமெரிக்க படையும் பணமும் பாதுகாக்க முடியாதுபோனது இன்றைய வரலாறு.

பணம் படைத்த சௌதி அரேபியா தனது நாட்டு மக்களுக்குரிய கல்வி, வளப்புள்ள வாழ்வு போன்ற பெரும் நோக்கங்களை நிறைவேற்ற முன்வரவில்லை. அரபு நாடுகளின் தலைவனாகவும், இஸ்ரேலை அடக்கி வைக்கவும் மத்திய கிழக்கு வெளிநாட்டு விவகாரங்களில் வெற்றி காணவும் விரைகின்றது.

உலக அடிப்படையில் இவ்விரு நாடுகளின் அதீத ஒற்றுமையை கணிப்பதானால் அடுத்த வல்லரசான சோவியத் ரஷ்யாவின் ஆதிக்கத்தை முறியடிக்கவே இவ்வித பணம் படை ஒற்றுமை ஏற்படுகின்றது.

எனவே ஐ. நாவின் மூன்றாவது தடவை செயலாளர் நாயகமாகத் தெரிவில் போட்டியிடும் திரு. கேட் வால்டைம் சொன்னது போல், இராணுவ அதிகரிப்பில் பணம் செலவிட்டால், பசியால் வாடும் வளர்முக நாடுகளுக்கு உதவுவது எவ்வாறு?

செல்வர் வறியவர்க்குதவும் அறநெறி அதிகாரம் தேடி அலையும் மனிதனுக்கோ, நாட்டுக்கோ புறம்பானது. இது உலகை ஆட்டி அசைப்பதை நாம் எங்கள் சிறிய நாட்டிலே காணமுடிகிறது.

வெளிநாடுகளின் தயவில் தங்கியிருக்கும் நாம், சுதந்திரமாக, சிக்கனமாக, மனிதாபிமான திருக்கட்டங்கி வாழ முடியுமா?

## போலந்து

இரண்டாவது உலகமா யுத்தத்தில் போலந்து ஹிட்லரின் ஆக்கிரமிப்பு ஆளாகி அவலப்பட்டது. மறப்பதற்கில்லை.

வறுமை வாழ்விலே இன்றும் அவதியுறும் போலிஷ் மக்களுக்கு பெரும் எதிரியானது அணுகிவரும் மாரிகாலம் இறைச்சி மீன் பழவகை கிரெம்விலையேற்றம் டபிள் விலையேற்றமென்றும் மக்கள் உயிர் வாழ முடியாத நிலையைக் குறிக்கும்.

இதன் விளைவாக எழுந்த ஒருவருடப்போராட்டம் கம்யூனிஸ்ட் கட்சிக்கும் சுதந்திர தொழிற்சங்கத்துக்குமிடையே தளர்வடைவதாகவில்லை.

சுதந்திர தொழிற்சங்கம் எள்ளளவும் நெகிழாத நிலைக்கு நியாயமான காரணம் மக்கள் விலையேற்றத்தைத் தாங்கமுடியாத நிலை. விலை அதிகரிக்காவிடில் நாட்டின் பொருளாதாரம் குலைந்து கெடுமென்பது ஆட்சியின் வாதம்.

இந்த இழுபறியில் சோவியத்யூனியன் தலையிட்டு, தொழிலாளரின் போரை முறியடிக்குமென்று நம்பியிருந்தவர்கள் ஏமாற்றமடைந்தனர்.

ஆட்சியின் தலைமைப் பதவியில் பல மாற்றங்கள் ஏற்பட்டன அதே சமயம் தொழிற் சங்கவாதிகளின் தீவிரவாதப்போக்கை அடக்கப் பொலிசார் தாக்குதல் இடம்பெற்றது.

இரண்டாவது தடவை ஒருமணித்தியால பொது வேலை நிறுத்தத்தை சுதந்திர தொழிற்சங்கம் நடத்தி முடித்தது. கம்யூனிஸ்ட் ஆட்சியானாலும் வறுமை போராட்டத்தால் அகற்றப்பட வேண்டியது!

### திருச்செந்தூர் முருகன்

# தமிழ்நாட்டுத் தெய்வம்; எந்நாட்டார்க்கு முரியவன்!

க. சி. குலரத்தினம்

கந்தழி எனத் தொல்காப்பியர் குறிப்பிடும் கந்து என்னும் வேரடியாகப் பிறந்த பெயர் கந்தன் எனக் கருதுவர். கந்து என்பது பற்றுக்கோடு என்பதாகும். உருவ வழிபாட்டில் மிகப்பழையது கந்து. மனம் புலன்கள் வழிப்போகாமல் பற்றுவதற்குரிய பற்றுக்கோடு கந்து. 'பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப் பற்றுக பற்றுவிடற்கு'' என்பது திருக்குறள். கந்தைப் பற்றினர்க்கு முருகன் தன் இளநலங்காட்டி ஆட்கொண்டருளுவன். முருகன் தமிழ்நாட்டுத்தெய்வமாயினும், அவன் எந்நாட்டவர்க்கும் உரியவன், பொதுவானவன். அவனை 'மனித்தர்பத்தர் தமக்கு எளியோனே, மதித்த முத்தமிழிற் பெரியோனே'' என்று அருணகிரிநாதர் அருளுவர்.

அருணகிரிநாதர் முருகப் பெருமான் மீது பெரும் பக்தி கொண்டு 16 000 திருப்புகழ்ப் பாடல்கள் பாடியும் வேந்தணியாதவராகிக் கந்தரலங்காரம், கந்தரனுபூதி, கந்தரந்தாதி, திருவகுப்பு, வேல்விருத்தம், மயில்விருத்தம், சேவல் விருத்தம் முதலிய பல்வேறு பாடல் தொகுதிகளையும் பாடியுள்ளார். முருகன் திருநாமங்களுள் ஒன்றையேனும் நினைத்தாலும் சொன்னாலும் கேட்டாலும் உள்ளம் உருகுவதோடு, ஒப்பில்லாத பேரானந்தம் பெருகித் தீராத வினைகளெல்லாம் தீர்க்கும் என்பர்; இக்கருத்தை,

"ஈராறு அருள்விழியும்
மாமுகங்கள் ஆறும்
விரிகிரணஞ் சிந்தப்
புனைந்த திருமுடிகள் ஒ
ராறும் எந்தத் திசையும்
எதிர் தோன்ற வந்து
இடுக்கண் எல்லாம்
பொடிபடுத்தி எவ்வர
மும் தந்து புகுந்து
உல்லாசமாக உளத்திருந்து''

என்று குமரகுருபரர் கந்தர் கலிவெண்பாவிற்பாடுவர்.

ஆறுமுகப் பெருமானின் ஆறெழுத்து மந்திரத்தை இசையயில் சடாட்சரம் என்று கூறும் அருணகிரிநாதர், இதனால் இகபர சௌபாக்கியம் பெறலாம் என்பர். சிதம்பர சுவாமிகளும் இக்கருத்தைத் தமது திருப்போரூர்ச் சந்நிதி முறையிற் பாடியுள்ளார்.

"முருகா எனவுனை யோதுந்
தவத்தினர் மூதுலகில்
அருகாத செல்வம் அடைவார்
வியாதியடைந்துழையார்
ஒருகாலமுந் துன்ப மெய்தார்
பரகதியுற்றிடுவார்
பொருகாலன் நாடு புகார்சம
ராபுரிப் புண்ணியனே''.

ஆறுமுகப்பெருமானின் மந்திரத்தை மஹாவாக்கியகூடம் என்று சுப்பிரமணிய புஜங்கம் குறிப்பிடுகிறது. இதில் ஏழுகோடி என்னும் "ஏழு முடிபுகளையுடைய மந்திரங்கள் யாவும் அடங்கும் என்பர். ஆறுமுகனின் அருட்செயல்களைத் திருமுருகாற்றுப்படையில் நக்கீரரும், திருமந்திரத்தில் திருமூலரும் அருமையாகப் பாடியுள்ளனர்.

திருச்செந்தூர் முருகனைச் சிந்தையிற் கொண்டு திருநாவுக்கரசுநாயனார் சிவனைப்பாடும் போது, "நம் செந்தில் மேய வள்ளி மணாளர்க்குத்தாதை கண்டாய்" என்று திருமறைக்காட்டு இறைவனைப்பாடுவர். திருச்செந்தூரில் எழுந்தருளியிருந்தவாறே முருகப்பெருமான் வீரவாகு தேவரைச் சூரனிடம் அவனைச் சோதித்து வருகவெனத் தூதனுப்பினர்.

"சூரனைச் சோதித்து வருகென்று தடந்தோள் விஜயவீரனைத் தூதுவிடுத்தோனே''

என்று குமரகுருபரர் இதனைக் குறித்துப்பாடுவர். இந்நகரம் முருகப்பெருமானுக்கு வெற்றியீட்டிக்கொடுத்ததலம் எனவே இதனை ஜெயந்திபுரம் என வழங்குவர். திருச்செந்தூரிற் சூரசம்மாரவிழா பெருவிழாவாகக் கொண்டாடப்பெறுவது. இங்குள்ள ஆறுமுக சுவாமி என்னும் சண்முகப் பெருமானின் திருவுருவம் அழகியது, அற்புதமானது, பாரியது. வீரம், அருள், அன்பு ஞானம், இன்பம், கருணை ஆகியவை ததும்பும் ஆறுமுகநயினார் அவர். ''பன்னிருகைக் கோலப்பாவாணர் கொடியவினை தீர்த்தருளும் வேலப்பா செந்திவாழ்வே'' என்பது திருமுருகாற்றுப்படை வெண்பா. இன்னொரு வெண்பா முருகனைச் செந்திமுதல்வனே எனப் போற்றுகிறது. நம்பிக்கையோடு போற்றுகிறது.

சங்கராசாரிய சுவாமிகள் திருச்செந்தூர் முருகன் மீது தமது சுப்பிரமணிய புஜங்கத்தில் ஆறுபாடல்கள் பாடியுள்ளார். திருச்செந்தூரானைக் காத்துநிற்கும் வீராதி வீரன் வீரவாகுவின் பெயரால் அந்நகர் வீரவாகு பட்டணம் எனவும் வழங்குகின்றது.

திருச்செந்தூர் முருகனின் திருநீறு பெருமதிப்புப் பெற்றது. தீராதவினைகளைத் தீர்த்துவைக்கும் மருந்தென அங்கு கிடைக்கும் இலைவிபூதி போற்றப்படுகிறது. ''செந்திநகர்ச்சேவகா என்று திருநீறணிவார்க்கு மேவாதே வினை'' என்று பக்தர் பாடுவர்.

திருமுகங்கள் ஏற்பப்பன்னிரு திருக்கரங்கள் அருள்புரிய முருகப்பெருமான் எழுந்தருளுகின்றார். சூரியனின் ஒளி முழுதும் உலகில் விழுவதானால் எல்லாம் பொசுங்கிவிடும். அவ்வாறு பொசுங்காமல் மட்டுப்படுத்துபவர் அந்தரத்தே செல்லும் முனிவர்கள் அம்முனிவர்களைக் காத்தருள் செய்வது ஒருகை இடுப்பிலே ஊன்றியது ஒருகை ஆனையின் அங்குசத்தை ஏந்தியது ஒருகை துடையிலே ஊன்றியது ஒருகை கேடயத்தைத் தாங்கியது வேற்படையைத் தாங்கியது ஒருகை நெஞ்சுக்கு அருகில் மோன முத்திரை காட்டுவது ஒருகை மாலையோடு சேர்ந்துள்ளது. ஒருகை முரடர்களைத் திருத்த உயர்த்தியது ஒருகை இனிய ஓசையுள்ள மணியை அடிப்பது ஒருகை மழையைப் பெய்விக்கிறது ஒருகை மணமாலை ஏந்தியது ஒருகை.

## கல்வி அமைச்சு அதிகாரியும் கலந்துகொள்வார்

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் சனிக்கிழமை வண்ணைவைத்தீஸ்வர வித்தியாலயத்தில் வடமாகாண அதிபர்களால் நடத்தப்படவிருக்கும் கல்வி வெள்ளை அறிக்கை ஆலோசனைகள் தொடர்பான கருத்தரங்கில் கல்வி அமைச்சைச் சேர்ந்த கல்விப்பணிப்பாளர் திரு. ஈ. கே. சண்முகநாதனும் கலந்துகொள்வார்.

முன்னர் அறிவிக்கப்பட்டபடி யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் ப. சந்திரசேகரம், விரிவுரையாளர் திரு. வி. ஆறுமுகம், ஓய்வு பெற்ற அதிபர் திரு இ. சபாலிங்கம், சாவகச்சேரி மகளிர் கல்லூரி அதிபர் திரு கு. ராஜலிங்கம் ஆகியோரும் கலந்துகொள்வர்

## புகையிரதப்பாதை அமைக்க ஆரம்ப நடவடிக்கை

(மாவிட்டபுரம்)

காங்கேசன் துறையில் அமைக்கப்பட்டு வரும் புதிய துறைமுகத்திலிருந்து காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலைக்கு புகையிரதப் பாதை அமைக்க ஆரம்ப நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

காங்கேசன்துறையில் புதிதாக அமைக்கப்பட்டுவரும் துறைமுகத்திலிருந்து சிமெந்துத் தொழிற்சாலைக்கு நேரடியாக பொருட்களைக் கொண்டு வந்து சேர்ப்பதற்காகவே இந்தப் புகையிரதப்பாதை அமைக்கப்படுகிறது.

தொழிற்சாலையின் வடக்குப் புற வாயிலின் ஊடாக அமையவுள்ள இப்புகையிரதப்பாதைக்காக நிலத்தைச் சீர் செய்யும் நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

நிலம் சீர் செய்யப்பட்டபின் புகையிரதப்பாதை அமைக்கும் வேலைகள் ஆரம்பமாகும் என தெரிவிக்கப்படுகிறது. (வ)

## கண்ணதாசன் மறைவுக்கு யாழ். மாநகரசபை அஞ்சலி

[யாழ்ப்பாணம்]

தமிழக அரசின் ஆஸ்தானக் கவிஞர் கண்ணதாசனின் மறைவுக்கு யாழ். மாநகரசபை அஞ்சலிசெலுத்தி ஏகமனதாக அனுதாபத்தீர்மானம் நிறைவேற்றியது.

சபை அங்கத்தவர்கள் அமரர் கவிஞர் கண்ணதாசனின் கவித்திறமையைப் பாராட்டி இரங்கலுரை நிகழ்த்தினர்.

அனுதாபத் தீர்மானத்தின் பிரதிகளை தமிழக அரசுக்கும், கவிஞரின் குடும்பத்தாருக்கும் அனுப்பிவைப்பதென்று சபை முடிவுசெய்துள்ளது [மா]

## இன்று பரிசளிப்பு

யாழ்ப்பாணம்

காரைநகர் இந்துக் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா இன்று வெள்ளிக்கிழமை காலை கல்லூரி அதிபர் கவிஞர் காரை செ. சுந்தரம்பிள்ளை தலைமையில் நடைபெறவுள்ளது. இவ்விழாவில் பிரதம விருந்தினராக யாழ். இந்துக் கல்லூரி முன்னாள் அதிபர் திரு என். சபாரத்தினம் கலந்து கொள்வார்.

# சவூதிக்கு 'ராடார்' விமானங்கள்: ரீகனுக்கு செனட் அங்கீகாரம்!

வாஷிங்டன், அக். 29

சவூதி அரேபியாவுக்கு நவீன "ராடார்" விமானங்களை வழங்கும் அமெரிக்க ஜனாதிபதி திரு. ரொனால்ட் ரீகனின் திட்டத்திற்கு அமெரிக்க செனட் சபை அங்கீகாரம் அளித்துள்ளது.

ரீகனின் இத்திட்டத்திற்கு ஆதரவாக 52 செனட்டர்களும், எதிராக 48 செனட்டர்களும் வாக்களித்துள்ளனர்.

சவூதி அரேபியாவுக்கு நவீன "ராடார்" விமானங்களை வழங்கும் ரீகனின் திட்டமானது மத்திய கிழக்குப் பிரச்னையை மேலும் விரிவுபடுத்துமெனச் சோவியத் யூனியன் தெரிவித்துள்ளது.

இஸ்ரேலின் பாதுகாப்புக்கு யுத்த ஆயுதங்களை வழங்கும் அமெரிக்காவின் திட்டத்தை இந்தியா கண்டித்திருந்தது.

சவூதி அரேபியாவுக்கு 250 கோடி டாலர் பெறுமதியான 'ராடார்' விமானங்களை வழங்கும் அமெரிக்க ஜனாதிபதி திரு. ரீகனின் திட்டத்தை இரு வாரங்களுக்கு முன்னர் அமெரிக்கப் பிரதிநிதிகள் சபை நிராகரித்திருந்தது தெரிந்ததே. (வெ)

## ஐ. நா. பொதுச்செயலாளர் தெரிவுமுயற்சி இரண்டாவது தடவையும் தோல்வி!

நியூயோர்க், அக். 29

ஐக்கிய நாடுகள் சபையின் புதிய பொதுச் செயலாளரைத் தெரிவு செய்யும் முயற்சியின் இரண்டாவது தடவையாக நேற்று ஈடுபட்ட ஐ. நா. பாதுகாப்புச்சபை இதில் தோல்வி அடைந்துள்ளதென அறிவிக்கப்பட்டது.

நேற்று இடம்பெற்ற வாக்களிப்பின்போது திரு. வால்ட் ஹெய்முக்கு ஆதரவாக 11 பேரும், தன்சானிய வெளிநாட்டு அமைச்சர் ஜனுப் அகமட் சலீமுக்கு ஆதரவாக 8 பேரும் வாக்களித்தனர். 5 பேர் வாக்களிப்பின்போது சமூகமளிக்கவில்லை.

முதற்கட்ட வாக்களிப்பின் போது டாக்டர் வால்ட் ஹெய்முக்கு எதிராகச் சீனாவும், ஜனுப் சலீமுக்கு எதிராக அமெரிக்காவும் தமது வீட்டோ அதிகாரத்தைப் பயன்படுத்தியிருக்கலாமெனக் கூறப்பட்டது. (வெ)

## பாண்டிச்சேரியில் 12மணிநேர வேலைநிறுத்தம்!

சென்னை, அக். 29

பாண்டிச்சேரியில் நேற்று முன்தினம் 12 மணி நேர வேலைநிறுத்தம் நடைபெற்றது. ஜவுளி ஆலைகளில் 7,000 ஊழியர்களின் பிரச்னை பற்றித் தீர்வுகாணவேண்டுமென்ற கோரிக்கையை முன்வைத்து இவ்வேலைநிறுத்தம் நடைபெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

தொழிற்சாலை ஒன்று தாக்கப்பட்டதைத் தொடர்ந்து சிலர் கைதுசெய்யப்பட்டனர். பஸ் போக்குவரத்து, கடைகள் நடைபெறவில்லை. மத்திய அரசு அலுவலகங்களில் வழக்கம்போல் வேலைகள் நடைபெற்றது. (உ-வெ)

## நூல்கள் அன்பளிப்பு

சென்னை, அக். 29

தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக் கழகத்திற்கு அரிய பல நூல்களை திருமதி ஹவிட்டா ராஜ் அன்பளிப்புச் செய்துள்ளார்.

இந்நூல்களில் பழமையான நூல்களும், வரலாற்றுக் குறிப்புக்களும் அடங்கியுள்ளன. (வெ)

## பஸ்மீது கல்வீச்சு 6 மாணவர் கைது

சென்னை, அக். 29

பஸ்மீது கற்கள் வீசியதாக 6 மாணவர்கள் கைதுசெய்யப்பட்டனர். சென்னையில் வைத்து பஸ்ஸில் ஏறிய 150 மாணவர்கள் பஸ்ஸை பல்கலைக்கழகத்திற்கு செலுத்துமாறு கோரினர். சாரதி மறுத்தபோது டஸ் வந்தபோது கற்கள் வீசப்பட்டதாக கூறப்படுகிறது. (வெ)

## கேரளத்தில் கம்யூனிஸ்ட் இல்லாத அரசு அமைக்க முயற்சி

புதுடில்லி, அக். 29

"கேரளத்தில் மார்க்ஸியக் கம்யூனிஸ்ட்கட்சி அல்லாத அரசு ஒன்றை ஜனநாயகக் கட்சிகளுடன் கூட்டுச்சேர்ந்து அமைக்க இந்திரா காங்கிரஸ் கட்சி முயன்றுவருகிறது."

மேற்கண்டவாறு கேரள இந்திரா காங்கிரஸ் கட்சிப் பொதுச் செயலாளர் திரு. கல்பனாதிராவ் நிருபர்களிடம் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

"இந்திரா காங்கிரஸ்கட்சியும், காங்கிரஸ் எஸ் கட்சியும் கூட்டுச் சேர்ந்து கேரளத்தில் ஆட்சி அமைப்பது பற்றி ஆலோசித்து வருகிறது" என்றார்.

இதேவேளை கேரள இந்திரா காங்கிரஸ் சட்டசபைத்தலைவர் திரு. கருணாகரன் இது தொடர்பாக இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தியுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக இன்று புதுடில்லி செல்லவுள்ளார்.

சில தினங்களுக்கு முன்னர் திரு. நாயனார் தலைமையிலான கேரள அரசு ராஜினாமாச் செய்திருந்தது தெரிந்ததே. (வெ)

## ஆச்சார்யார் காலமானார்

சென்னை, அக். 29

பிரபல தமிழறிஞரும், எழுத்தாளருமான திரு. பி. சி. ஆச்சார்யார் (பிஸ்ரீ) காலமானார். இவர் 150 க்கும் அதிகமான நூல்களை எழுதியுள்ளார்.

மதுரையில் நடைபெற்ற உலக தமிழாராய்ச்சி மகாநாட்டில் இவர் கௌரவிக்கப்பட்டார். (வெ)

## இந்திராவின் இத்தாலிய விஜயம்

புதுடில்லி, அக். 29

இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி நவம்பர் 9ந் தேதி முதல் 12ந் தேதி வரை இத்தாலிக்கு உத்தியோகபூர்வமான விஜயமொன்றை மேற்கொள்வாரென அறிவிக்கப்பட்டது.

ரோமில் நடைபெறும் உலக உணவு மாநாட்டில் இவர் முக்கிய உரையாற்றுவார்.

இதற்கு முன் நவம்பர் 6ந் தேதி பல்கேரியாவுக்கு 3 நாள் விஜயத்தை மேற்கொள்வார். அப்போது பிரான்ஸுக்கும் அவர் செல்லவிருக்கிறார் எனக் கூறப்பட்டது. (உ-வெ)

## தமிழ்நாட்டில் வெள்ள அபாயம்

சென்னை, அக். 29

தமிழ்நாட்டின் பல பகுதிகளில் தொடர்ந்து பெய்து வரும் மழையினால் வெள்ள அபாயம் ஏற்பட்டுள்ளது. (உ)



# சைக்கிள் ஓடும்போதே சங்கீதம்

## ஆர்ச்சர்

பைசிகிள் ரேடியோ

சைக்கிளில் இன்றியும் இயங்கும்.


3 பாட்டரிகள் இலவசம்.



உங்கள் நீண்ட தூர பைசிகிள் பிரயாணத்தை அனுபவியுங்கள். இந்த அதி நுட்ப சாதனத்தில் சத்தமிடும் கருவி அமைப்போடு பாதுகாப்பான எதிரொலியும் உண்டு உங்கள் பைசிகிள் ஹன்டல் பாரில் இணைத்து விடுங்கள்.

ஆர்ச்சர் பைசிகிள் ரேடியோ மோப்பெட்களிலும் பாவிக்கலாம். சைக்கிளிலிருந்து அப்புறப்படுத்தி வீட்டினுள்ளும் பாவிக்கலாம்

எல்லா நல்ல வியாபாரிகளிடமும் கிடைக்கும்




விலை. ரூ. 350/-

இணைப்போர்:
ஓர் ஒலியோனிக்ஸ் லிமிட்டட் இணைப்பு.

ஓர் பார்லட் குரூப் அங்கத்தவர்.

விற்பனையாளர்.
யுனிவர்ஸல் மார்கட்டிங் சர்விஸஸ்
158, கறல் ரோட், ஹெந்தல.
தொலைபேசி070 - 427/520

# எதிரிகள் வெளிநாடு செல்வதால் வழக்கு விசாரணைகள் ஸ்தம்பிதம்

(மாவிட்டபுரம்)

மல்லாகம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள பல வழக்குகளில் சம்பந்தப்பட்ட எதிரிகள் வெளிநாடுகளுக்குத் தப்பிச் சென்றுவிட்டதால் அவ் வழக்குகளின் விசாரணைகள் ஸ்தம்பிதமடைந்துள்ளது.

"மல்லாகம் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட பல வழக்குகள் விசாரணைக்கெடுக்கப் பட்டு பல தவணைகள் போடப் பட்டு பின்னர் சம்பந்தப்பட்டவர்கள் மீது பிடிவிறாந்து பிறப்பிக்கப்பட்ட நிலையில் ஒத்திப்போடப்பட்டு வருகிறது.

வழக்குகளில் சம்பந்தப்பட்ட எதிரிகள் வெளிநாடுகளுக்கு தப்பிச் சென்றுவிடுகிறார்கள். அநேக தாபரிப்பு வழக்குகளுக்கும் இதே நிலை ஏற்படுவதால் தாபரிப்பு பணத்தை வசூலிக்க முடியாமல் பல குடும்பங்கள் கஷ்டமனுபவிப்பதாகவும் கூறப்படுகிறது.

முன்னர் வெளிநாடு செல்வோர் தாம் வழக்குகள் எதிலும் சம்பந்தப்படவில்லை, குற்றம் எதுவும் இழைக்கவில்லை என்பதை பொலிஸ் பகுதியினர் மூலம் உத்தரவாதப் படுத்தி கடிதம் பெற்றிருந்தாலே வெளிநாடு செல்ல முடியுமென்ற நிலை இருந்தது. தற்போது இது தளர்த்தப்பட்டு பொலிஸ்பகுதியினரின் கடிதம் தேவையில்லை என தெரிவிக்கப் படுகிறது. இதனால் எதிரிகள் வெளிநாடுகளுக்குதப்பிச்செல்ல வாய்ப்பாக அமைந்து விடுகிறது எனக்கூறப்படுகிறது.

அரியாலையில்

## கத்திமுனையில் கொள்ளை!

(சுண்டிக்குளி)

கத்திமுனையில் வீட்டிலுள்ள வர்களை பணயம் வைத்து 4,500 ரூபா பெறுமதியான 'கசற்' வானொலியை கொள்ளை யடித்த சம்பவம் நேற்று முன் தினம் அரியாலையில் நடந்துள்ளது. அரியாலை பூங்கங்குளம் வீதியில் திருமதி வேலுப்பிள்ளை தனலெட்சுமி வீட்டிலேயே இக்கொள்ளை நடந்துள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக யாழ். பொலிசில் திருமதி வேலுப்பிள்ளை தனலெட்சுமி அளித்துள்ள முறைப்பாட்டில் சம்பவம் நடைபெற்ற தினம் அதிகாலை சுமார் 4மணியளவில் இனந்தெரியாதவர்கள் வெளியில் படுத்திருந்த வேலையாட்களைக் கத்தியைக்காட்டி கொன்றுவிடுவதாகப் பயமுறுத்தி பின்னர் கதவைத்திறந்து தன்னையும் பயமுறுத்தி வீட்டில் இருந்த கசெற் வானொலியை எடுத்துக்கொண்டு ஓடிவிட்டதாகத் தெரிவித்துள்ளார்.

பொலிசார் இச்சம்பவம் பற்றி விசாரணை செய்து வருகின்றனர். (க)

மன்னார்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இதனால் நாளாந்தம் தமது தேவைகளைக் கவனிக்க வெளியிடங்களுக்குச் செல்லும் மக்கள் எங்கும் செல்லாதிருக்கின்றனர்.

வீதிகளில் வாகனப் போக்குவரத்து குறைவாகவே உள்ளன பஸ் வண்டிகள் சேவையிலீடுபடுத்தப்பட்டுள்ள போதிலும், பிரயாணிகளின் தொகை குறைவாகவே காணப்படுகிறது. மாலை 5மணிக்குப் பின்னர் வீதிகளில் சனநடமாட்டம் மிகவும் குறைவாகவே காணப்படுகிறது. அதேவேளை மன்னார் மாவட்டத்தில் அமைதியை நிலைநாட்டும் பொருட்டு பொலிசார் ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.

பொலிசார் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட வசதியாக மன்னார் அரசாங்க அதிபர் பொறுப்பில் உள்ள பல ஜீப்வண்டிகள் தலைமன்னார், மன்னார், முருங்கன் ஆகிய பொலிஸ் நிலையங்களுக்கு தற்காலிகமாக வழங்கப்பட்டுள்ளன. (க)

## மூதாட்டியின் வீட்டில் கொள்ளை

(ஊரதீவு)

ஊரதீவு கிராமத்தில் தனியாக வீட்டிலிருந்த வயோதிப மாது ஒருவரின் பணமும் நகைகளும் வீட்டுத்தளபாடங்களும் கொள்ளையடிக்கப் பட்டுள்ளன.

ஊழியர்கள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வதாக தெரிவிக்கப்படுகிறது.

காங்கேசன் துறைப் பகுதியில் தற்போது பொலிசாரது ரோந்தும் அதிகரிக்கப்பட்டுள்ளது. இடையிடையே ஆங்காங்கே சிறு தாக்குதல்கள் இடம் பெற்றுவருகின்றன.

மக்கள் மத்தியிலிருந்த பதட்டநிலை தற்போது ஓரளவு குறைந்துள்ளது. வீதிகளில் மக்களது நடமாட்டமும் அதிகரித்துள்ளது.

தவறுதலாக

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வம் இடம்பெற்றது.

இச்சந்தியில் வாகனமொன்று விபத்துக்குள்ளானபோது குரும்பசிட்டியைச் சேர்ந்த இராசரத்தினம் (40 வயது) என்பவர் காயமுற்றார். அவ் விபத்தைப் பார்ப்பதற்காக சந்தியில் மக்கள் கூட்டம் கூடியதாம். அப்போதுதான் ஆயுதப்படையினர் ஒருவரின் துப்பாக்கி வெடித்ததாகச் சொல்லப்பட்டது. இச் சம்பவத்தின்போது புன்னாலைக்கட்டுவனைச்சேர்ந்த எஸ். பேரம்பலம் (வயது 25) என்பவர் காலில் காயமுற்று யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

வாகன விபத்திற்குள்ளான இராசரத்தினமும் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாகவும் விபத்து சம்பந்தமாகவும் சுன்னாகம் பொலிசார் விசாரணையை மேற்கொண்டுள்ளனர். (மா)

நகை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தனிப்பட்ட அடகுக்கடைகளை நாடாதிருந்தனர். இதன் எதிரொலியாக தனிப்பட்ட அடகு நிலையங்கள் சில மூடவேண்டிய சூழ்நிலையும் ஏற்பட்டது. கணிசமான தொகையினர் கொள்ளை இருட்டு ஆகியவற்றிலிருந்து பாதுகாக்கும் பொருட்டும், மக்கள் வங்கியில் நகைகளை அடகு வைத்தனர்,

தற்போது மக்கள்வங்கி யாழ் மாவட்டத்தில் முற்றாக அடகு பிடிப்பதை நிறுத்தியுள்ளதால் இப்பகுதி மக்கள் பெரும் சிரமத்தை எதிர் நோக்க வேண்டிய நிலைக்குள்ளாகியுள்ளார்கள் என்று கூறப்படுகிறது. (க)

## நியமனம்

(நயினாதீவு)

யாழ். மாவட்ட அபிவிருத்தி சபை நயினாதீவு உப-அலுவலகத்தின் நிர்வாக உத்தியோகத்தராக திரு. க. பரமலிங்கம் நியமனம் பெற்றுள்ளார். இவர் முன்னர் அங்கு விசேட ஆணையாளராகப் பணி புரிந்தது குறிப்பிடத்தக்கது.

காரைநகர்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இக்குழுவினர் தயாரித்த அறிக்கை நவம்பர் மாதம் 3-ம் திகதி கொழும்பில் நடைபெறும் சீ-நோர் மகாநாட்டில் கடற்றொழில் அமைச்சரிடம் கையளிக்கப்படவிருக்கிறது (மா)


# வெளிநாடு பயணமா?

உலகின் எப்பாகத்துக்கு செல்லவேண்டுமானாலும்

யாழ்ப்பாணத்தில் எங்களை நாடுங்கள்.

நம்பிக்கையான, பிரபல்யம் வாய்ந்த MACKINNON MACKENZIE & Co of CEYLON LIMITED ன் யாழ்ப்பாணக்கிளை

விரும்பிய விமானத்தில் ஆகக்குறைந்த கட்டணங்களில்

## விமான டிக்கட்டுகள்

சிங்கப்பூர் (ஒருவழி) கூட்டாக செல்வோருக்கு மேலும் விசேட கழிவு வழங்கப்படும்.

இலங்கையில் AMERICAN EXPRESS பிரதிநிதித்துவம் பெற்ற மக்கினொன்ஸ் இடம் அறிவிக்கப்படும் அதே கட்டணத்தில் (TRAVELLER CHEQUES) பிரயாண காசோலைகள் பெற்றுக்கொள்ளலாம்.

★ நைஜீரியன் விசா

நைஜீரிய டிக்கட் எடுப்பவர்களுக்கு மேலும் குறைந்த கட்டணத்தில் விசா பெற்றுத்தரப்படும். தொடர்பு கொள்க:

## மக்கினொன்ஸ் ட்ரவல் சேர்விஸ் (சிலோன்) லிமிட்

8, பருத்தித்துறை வீதி யாழ்ப்பாணம்.

த. பெ. எண்; 92 தொலைபேசி: 8154


## இப்படியும் நடக்கிறது

யாழ்ப்பாணத்திலுள்ள அரசாங்க இலாகா ஒன்றின் உயர் அதிகாரிகள் சிலர் ஜப்பானியப் நிபுணர் ஒருவரை வரவேற்பதற்காக நேற்றுக்காலை அவசரம் அவசரமாக பலாலி விமான நிலையத்துக்குச் சென்றனர். மாலையும் கையுமாக விமானத்தை அவர்கள் எதிர்பார்த்துக்கொண்டிருந்தனர். இவர்களுடன் கூடவே புகைப்படப்பிடிப்பாளரும் தயார் நிலையில் இருந்தார்.

குறித்த நேரத்தில் விமானம் வந்திறங்கியது.

அந்தப்பிரமுகருக்கு கழுத்து நிறைய மாலைகள் அணிவிக்கப்பட்டன. கைகுலுக்கப்பட்டது. "பளிச் பளிச்" என்று புகைப்படங்களும் தாராளமாக எடுக்கப்பட்டன.

மரியாதை உபசரணைகளை மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொண்டு; "அப்பிளிக்கேஷன் நிறைய வந்ததா? செலக்ஷன் எல்லாம் முடிந்து விட்டதா..." என்று அப்பிரமுகர் கேட்டபோதுதான், அரசு அதிகாரிகள் "திரு திரு" என்று முழித்தனர்.

வந்த பிரமுகர் ஜப்பான் நாட்டைச் சேர்ந்தவர் அல்ல. வேலைக்கு ஆட்களைத் தெரிவுசெய்ய வந்திருந்த சிங்கப்பூர் ஏஜன்ஸி அவர். சீனக்காரர்!

ஊடுருவி

# புனர்வாழ்வுபெற்ற ஆமைகள்!

(மாவிட்டபுரம்)

வீடொன்றிலிருந்து கைப்பற்றப்பட்ட 6 ஆமைகள் மல்லாகம் நீதிபதியின் உத்தரவின் பேரில் மீண்டும் கடலில் விடப்பட்டன.

இரகசியத் தகவலின்பேரில் மாதகலைச் சேர்ந்த வீடொன்றைச் சோதனையிட்ட காங்கேசன்துறைப் பொலிசார் அங்கிருந்து 6 ஆமைகளை மீட்டனர். மன்னார் பகுதிக்கு கடற்றொழிலில் ஈடுபடச் சென்றிருந்த போது இந்த ஆமைகள் அகப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்த ஆமைகளை வெட்டி இறைச்சியாக்குவதற்கு முன்பாக காங்கேசன் துறைப் பொலிசார் அங்கு போய்ச் சேர்ந்துவிட்டனர். இதனால் அவை காப்பாற்றப்பட்டன.

6 ஆமைகளையும் காங்கேசன்துறைப் பொலிசார் மல்லாகம் நீதிமன்றத்தில் ஒப்படைத்தனர்.

ஆமைகள் ஆறையும் மீண்டும் நடுக்கடலுக்குக் கொண்டு சென்று விடுமாறு நீதிபதி திரு. ஆர். இராஜசிங்கம் உத்தரவிட்டார்.

இதற்கிணங்க காங்கேசன்துறைப்பொலிஸ்சார்ஜன்ட் திரு. தியாகராஜா வள்ளம் ஒன்றை அமர்த்தி ஆமைகளை அதில் ஏற்றிச்சென்று காங்கேசன் துறைக்கடலில் விட்டார்.

சம்பந்தப்பட்ட மூன்று நபர்களையும் தலா 500 ரூபாசரீரப் பிணையில் செல்ல நீதிபதி அனுமதித்தார்.

கிராமோதய சபைகளில்

## நாடற்ற பிரஜைகளும் அங்கம் வகிக்கலாமா?

### நுவரெலியா மாவட்ட அபிவிருத்திசபையில் விவாதம்

(நுவரெலியா)

குடியுரிமையற்றவர்களும் நாடற்றவர்களும் கிராமோதயச் சபைகளில் அங்கம் வகிக்கலாமா என்பது பற்றிய கருத்துப்பரிமாறல் நுவரெலியா மாவட்ட அபிவிருத்திசபைக் கூட்டத்தில் இடம் பெற்றது.

சபைத்தலைவர் திரு. ரஹித்த தென்பிட்டிய தலைமையில் மேற்படி கூட்டம் நுவரெலிய மாநகரசபை மண்டபத்தில் நடைபெற்றது. அபிவிருத்தி சபை அங்கத்தவரான திரு பி. ஜி. அமரபாலா என்பவர் குடியுரிமையற்றவர்கள் கிராமோதைய சபைகளில் அங்கம் வகிக்கலாமா என்பது பற்றிய கேள்வியை எழுப்பினார்.

கிராமோதைய சபைகளின் தலைவர்களாகவுள்ளவர்கள் சிலர் பிரஜாவுரிமை குடியுரிமை யற்றவர்களாக இருப்பதாகவும், இப்படியானவர்கள் அங்கத்துவம் பெறுவதற்குள்ள உரிமைகள் பற்றி ஆராயவேண்டுமெனவும் பிரதம மந்திரியின் கருத்துக்களையும் இது சம்பந்தமாகப் பெறவேண்டுமெனவும் அவர் குறிப்பிட்டார்.

இக்கூட்டத்தில் கிராமிய அபிவிருத்தி அமைச்சர் திரு எஸ். தொண்டமான் பேசுகையில் பிரதம மந்திரியின் முக்கியமான நோக்கம் மக்களைப் பெருமளவில் அபிவிருத்தியில் பங்குபடுத்துவதாகும் அரசியல் அமைப்பில் இது தெளிவாக விளங்குவதுடன் இந் நாட்டிலுள்ள சகலரும் அரசியலமைப்பின் அடிப்படை உரிமைகளை அனுபவிக்கவே வேண்டுமென்று குறிப்பிட்டார்.

மாவட்ட சபை அங்கத்தவரும் சட்டத்தரணியுமான திரு. பெரிசுந்தரம் இது சம்பந்தமான சட்டவாதங்களைச் சமர்ப்பித்துத்தன் கருத்துக்களைத் தெரிவித்தார்.

நுவரெலியா மாவட்ட அமைச்சர் செல்வி ரேணுகா ஹேரத் பேசுகையில் இவ்விவகாரத்தை பெரிதுபடுத்தக்கூடாதென்றும் எதுஎவ்வாறாயினும் எமது பிரதேசத்தின் அபிவிருத்தி எமது மக்களால் செய்யப்படவேண்டியதே முக்கியமாகும் எனவும் குறிப்பிட்டார்.

இறுதியாக இவ் விடயத்தை விட்டுவிடுவதெனத் தீர்மானிக்கப்பட்டது. (கி)

லொறிச் சாரதிக்கு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது லொறிச்சாரதி பாலசுப்பிரமணியம் குற்றத்தை ஒப்புக்கொண்டதைத் தொடர்ந்து ஐம்பது ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் சினன்கோவில் மேற்கு வீதி, 68-ம் இலக்கத்திலுள்ள "ஈழநாடு" லிமிட்டெட்டுக்காக யாழ்ப்பாணம், காங்கேசன்துறை வீதி, 303-ம் இலக்கத்திலுள்ள கலாநிலைய அச்சகத்தில் 1981 ம் ஆண்டு அக்டோபர் 30-ம் திகதி அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper, The General P. O. Sri Lanka Regd.Q. B. 100236/81, P. O. Box 49. Jaffna. தொலைபேசி: 7707, 889, 8126.